# ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6

## பத்திரிக்கைச் செய்தி

---

2018–2019ம் ஆண்டு கணினி பயிற்றுநர் (நிலை–1) (முதுகலை ஆசிரியர் நிலை) நேரடி நியமனத்திற்கான அறிவிக்கை (Notification) ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் 01.03.2019 அன்று வெளியிடப்பட்டது. கணினி வழித் தேர்வு 23.06.2019 (Computer Based Examination) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 23.06.2019ல் நடத்தப்பட்ட கணினி வழித்தேர்வின் போது தொழில்நுட்ப கோளாறுகள் (Technical Problems) ஏற்பட்ட தேர்வு மையங்களின் விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையத் தளத்தில் (www.trb.tn.nic.in) வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி தேர்வு மையங்களில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தேர்வினை முழுமையாக நிறைவு செய்யாத தேர்வர்களுக்கு மட்டும் 27.06.2019 ஆம் நாளன்று நடைபெறவுள்ள மறுதேர்விற்கான தேர்வு மைய விவரத்துடன் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு ( Admit Card) விண்ணப்பதாரர்களால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு (Registered Email ID) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேர்வர்கள் நுழைவுச் சீட்டினை அச்சு பிரதி (Printout) எடுத்து தேர்வு மையத்திற்கு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நேரம் (Reporting time) மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு அசல் அடையாள அட்டையுடனும் (Original Identity Card) விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்த புகைப்படத்தின் அசல் பிரதியையும் (Original passport size Photograph) தவறாமல் எடுத்து வர வேண்டும். தேர்வு நாளன்று நழைவுச் சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள தேர்வு மையத்திற்கு தேர்வர்கள் காலை 8.30 மணிக்குள்ளாக வருகைபுரிய வேண்டும் என்ற விவரம் தெரிவிக்கலாகிறது.

நாள்: 25.06.2019

தலைவர்